தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 91/மா/2021
நாள். 13.12.2021

திருமதி. M. கல்பனா,
ஆவடி. – முறையீட்டு மனுதாரர்

திரு. வைத்தியலிங்கம்,
மாநகராட்சி பொறியாளர்
– எதிர்மனுதாரர்கள்

திரு. சங்கர்
திரு. சத்தியசீலன்
உதவி பொறியாளர்கள்
ஆவடி மாநகராட்சி

ஆவடி மாநகராட்சி T.N.H.B. எண்.400 LIC II, சென்னை–600 054 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி M. கல்பனா என்பவரது நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.10.2021–ல் பெறப்பட்டு 91/2021 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஆவடி மாநகராட்சி T.N.H.B. எண்.400 LIC II, சென்னை–600 054 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி M. கல்பனா என்பவர் ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட 48 வார்டுகளில் லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்ய டெண்டரில் கலந்துக் கொள்ள சென்றபோது ME வைத்தியலிங்கம், AE சங்கர், AE சத்தியசீலன் ஆகியோர் 25.10.2019 அன்று 3 மணி அளவில் நடைபெற்ற டெண்டரை 3.30 மணிக்கு ஓப்பன் செய்யாமல் மூன்று நாட்கள் கழித்து 29.10.2019 அன்று ஓப்பன் செய்து எங்களுக்கு எந்தவித தகவலும் தெரிவிக்காமல், Tender ரூல்ஸ்படியும், மிகவும் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த எனக்கு டெண்டர் ஆணை வழங்காமல், கையூட்டு பெற்றுக்கொண்டு, அதிக விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. மேத்யூ என்பவருக்கு பணி ஆணை வழங்கியுள்ளனர். அய்யா அவர்கள் Tender–ஐ ஆய்வு செய்து நீதி கிடைக்க பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். 01.06.2018 முதல் 20.10.2019 வரை கடும் வறட்சியில், கடன் வாங்கி டீசல் போட்டும், ஓட்டுநருக்கு சம்பளம் கொடுத்தும், ஆவடி மாநகராட்சியில் 48 வார்டுகளில் குடிநீர் சப்ளை செய்த பணத்தை பெற்றுத் தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் குடிநீர் சப்ளை செய்த பணம்

CMO Office- ல் இருந்து டிசம்பர் மாதம் 5 1/2 கோடி, பண்ட்ஸ் வந்தும் எங்களுக்கு பணம் கொடுக்காமல், எங்களுக்கு பின்னால் சப்ளை செய்த திரு மேத்யூக்கு கொடுத்துள்ள ஆணையர், மற்றும், ME, AE அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) பொறியாளர் திரு.வைத்தியலிங்கம், உதவிபொறியாளர்கள் திரு. சங்கர் மற்றும் திரு.சத்தியசீலன், ஆவடி மாநகராட்சி மற்றும் முறையீட்டு மனுதாரர் திருமதி. M. கல்பனா ஆகியோர் 28.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.10.2021 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“ ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட 48 வார்டுகளில், லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்வதற்கான டெண்டர் திறக்கும் நாளான 25.10.2019 அன்று திறக்காமல் இரண்டு நாட்கள் கழித்து 28.10.2019 அன்று மாநகராட்சி பொறியாளர்களால் திறக்கப்பட்டது. மேற்கண்ட டெண்டர் இரண்டு நாட்கள் கழித்து 28.10.2019 அன்று திறந்தபோது எனக்கு தெரிவிக்கப்படவில்லை. ரூ. 950/– என குறைந்த விலைப்புள்ளி குறிப்பிட்ட எனக்கு வழங்காமல், என்னைவிட அதிக விலைப்புள்ளியான ரூ.1000/– என குறிப்பிட்டுள்ள வேறொரு நபருக்கு மேற்கண்ட டெண்டரை வழங்கியுள்ளனர். அதற்கான காரணத்தை கோரும்போது மாநகராட்சி அலுவலர்களால் எனக்கு பதில் தரப்படவில்லை. மேலும் 1.6.2018 முதல் 26.10.2019 வரை லாரிகளில் குடிநீர் சப்ளை செய்த எனக்கு அதற்கான பில் தொகையை இதுவரை செட்டில் செய்யவில்லை. எனக்கு சேரவேண்டிய தொகையான ரூ.3 கோடியை ஆவடி மாநகராட்சியில் கேட்டபோது ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாத காரணத்தால் மேற்கண்ட தொகையை வழங்க இயலாது என தெரிவித்துள்ளனர். டெண்டர் புதுப்பிக்கப்பட வேண்டிய பணி பொறியியல் பிரிவைச் சார்ந்தது. எங்களது லாரிகளை ஓட்டாமல் நிறுத்திவிட்டால் எங்களை Black list செய்து எங்களுக்கு டெண்டர் எடுக்கும் வாய்ப்பினை அளிக்கமாட்டார்கள் என்கின்ற காரணத்தால் 1.6.2018 முதல் 26.11.2019 வரை எங்களது லாரிகளின் மூலம் குடிநீர் சப்ளை செய்தோம். பைனான்ஸ் மூலம் வாங்கப்பட்ட எங்களது லாரிகளுக்கு டீசல் மற்றும் ஓட்டுநருக்கு சம்பளம் கொடுத்து குடிநீர் சப்ளை செய்தோம். ஆவடி அரசு மருத்துவமனைக்கு குடிநீர் சப்ளை செய்ததற்கான ஆதாரத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். எனவே 1.6.2018 முதல் 26.10.2019 வரை ஆவடி மாநகராட்சி பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்ததற்கான நிலுவைத்தொகையை மாநகராட்சியால் வழங்கிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதற்கு காரணமான மாநகராட்சி அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ” என்றும் தெரிவித்துள்ளார்.

3) ஆவடி மாநகராட்சியில் பொறியாளராகப் பணிபுரியும் திரு. வைத்தியலிங்கம், உதவி பொறியாளராகப் பணிபுரியும் திரு ஏ. சத்தியசீலன், உதவிப்பொறியாளராகப் பணியாற்றி தற்போது பல்லாவரம் நகராட்சியில் உதவிப்பொறியாளராக பணியாற்றும் திரு மு. சங்கர் ஆகியோர் 28.10.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்தனர். தங்களது வாக்குமூலத்தில் ஆவடி மாநகராட்சியில் தனியார் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அவற்றிற்கான பணி உத்தரவுகளை வழங்கி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்தது. லாரிகள் மூலம் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்ய மனுதாரர்

திருமதி. கல்பனா என்பவருக்கு 26.04.2017 முதல் 31.05.2018 வரையிலான காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்றவுடன் ஒப்பந்ததாரரான மனுதாரர் திருமதி. கல்பனா என்பவருக்கு சேரவேண்டிய தொகை (டெபாசிட் தொகை நீங்கலாக) வழங்கப்பட்டு விட்டது. தற்போது மனுதாரருக்கு டெபாசிட் தொகையான ரூ.2.50 லட்சம் மட்டுமே நிலுவையில் உள்ளது என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால், ஒரு வருட கால ஒப்பந்தம் முடிந்த பின்னர், மாநகராட்சியின் எவ்வித பணி ஆணையுமின்றி 1.6.2018 முதல் 26.10.2019 வரை தன்னிச்சையாகவே ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ததாக மனுதாரர் கூறியுள்ளதை நாங்கள் மறுக்கிறோம்.

4) மேலும் 25.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, அரசு விடுமுறை நாட்களான சனிக்கிழமை மற்றும் தீபாவளி ஆகிய இரண்டு தினங்கள் கழித்து 28.10.2019 தொழில்நுட்ப கூர்ந்தாய்வு நிறைவு பெற்று, தொழில்நுட்பத்தகுதி பெற்ற ஒப்பந்ததாரருக்கு விலை விகித உரையினை (Financial Bid) 30.10.2019 அன்று திறக்கலாம் என முடிவு செய்து, மேற்கண்ட 28.10.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் டெண்டர் திறக்கும் நாள் மற்றும் நேரத்தை மனுதாரருக்கு மாநகராட்சியால் தெரியப்படுத்தவில்லை. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி பல்வேறு காரணங்களால் 4 முறை நடைபெறாமல் ஐந்தாவது முறையாகத்தான் முடிவு செய்யப்பட்டது.

5) மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மனுதாரர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளான 3 வருட முன் அனுபவம் மற்றும் Bank Statement for turn over, மற்றும் தேவையான வரைவோலை (Demand Draft) போன்றவற்றை இணைக்காதது போன்ற தொழில்நுட்ப காரணங்களால் மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படவில்லை. இது தொடர்பாக பலராமன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு (W.P. No. 31350 of 2019 and WMP No.31525 of 2019) அவ்வழக்கின் 21.09.2020 நாளிட்ட தீர்ப்பில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

6) மேலும் மேற்கண்ட பொருள் தொடர்பாக மனுதாரர் திருமதி. கல்பனா அவர்களின் 20.02.2020 மற்றும் 04.02.2021 ஆகிய நாளிட்ட புகார் மனுக்களின் மீது ஆவடி மாநகராட்சி ஆணையரால் 04.05.2021 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட நாளில் நடைபெற்ற அவ்விசாரணையில் மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அவ்விசாரணையின் அறிக்கையினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் செயலருக்கு 21.06.2021 நாளிட்ட கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்து அதன் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளார்கள்.

7) மேலும் தங்களது அறிக்கையில் ஆவடி மாநகராட்சியில் குடிநீர் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படாத பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய நகராட்சி மூலம் 8 எண்ணிக்கை குடிநீர் விநியோகமும், தனியார் மூலம் 11 எண்ணிக்கை வாகனங்களும் உபயோகப்படுத்தப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனியார் வாகனம் மூலம் விநியோகம் செய்ய ஒவ்வொரு ஆண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்தரவு வழங்கி விநியோகம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் மனுதாரர் மேற்படி தனியார் வாகனங்கள் மூலம் 2017–2018 ஆண்டு குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு 48 வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ள ஆணையர், ஆவடி பெருநகராட்சி அவர்களால் .26.04.2017 முதல் 31.05.2018 வரை ஓராண்டு காலத்திற்கு பணி உத்தரவு திரு எம்.கல்பனா, ஒப்பந்ததாரர் என்ற பெயரில் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி நிறைவு பெற்று அதற்கான பட்டியல்தொகை வழங்கப்பட்டுள்ளது.

<u>பணிக்கான முதல் ஒப்பந்தப்புள்ளி.</u>

மேற்படி குடிநீர் பணிக்கு 21.05.2018 அன்று 11 தனியார் லாரிகள் அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்ய மதிப்பீடு தொகை ரூ.220.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று 15.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தயார் செய்து 06.07.2018 அரசு ஒப்பந்தப்புள்ளி பெற, ஒப்பந்தப்புள்ளி தயார் செய்யப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை மறு ஆய்வு செய்து 2 பிரிவாக பிரித்து ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கவும், 5+ 5 = 10 வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் 31.07.2018 வரை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள வாடகை லாரிகள் கால நீட்டிப்பு செய்யலாம் என்ற குறிப்பு மட்டும் ஆணையர் வழங்கியுள்ளார். மேற்படி கால நீட்டிப்பு செய்ய எவ்விதமான உத்தரவும் ஆணையர் அவர்களால் வழங்கப்படவில்லை.

ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி 10 எண்ணிக்கை தனியார் வாகனங்களுக்கு ஐந்து, ஐந்து வாகனங்களாக பிரித்து இரண்டு மதிப்பீட்டாக தயார் செய்து ரூ. 90.00 + 90.00 இலட்சத்திற்கு உரிய மன்றப்பொருள் அனுமதி பெற்று ஒப்பந்தம் பெற 20.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தயார் செய்து, 08.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெற அறிக்கை வெளியிடப்பட்டது. மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை 06.08.2018 அன்று நகராட்சி ஆணையர் அவர்கள் இரத்து செய்து குறிப்பு வழங்கியுள்ளார்.

<u>பணிக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளி.</u>

மேற்படி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த காலம் முடிவுற்றதால் அதே பணிக்கு குடிநீர் விநியோகம் செய்ய 11 எண்ணிக்கை தனியார் வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 17.12.2018 அன்று கோப்புகள் தயார் செய்து மன்றத்தின் அனுமதி பெற்று, 24.01.2019 அன்று ஒப்பந்த அறிவிக்கை தயார் செய்து 14.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

மேற்படி ஒப்பந்தத்தை தடுக்க கோரி திரு. எம்.கல்பனா அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண்.4279/2019) வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கின் மீதான நகராட்சி வழக்கறிஞர் சட்ட கருத்துருவின்படி 14.02.2019 வரை மாலை 6.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பபந்தப்புள்ளியில் ஏதேனும் ஆவணங்கள் தேவைப்படின் அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி திறத்தல் தொடர்பாக வழக்கு தொடரப்பட்ட மனுதாரருக்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக ஒப்பந்தப்புள்ளி திறத்தல் அறிவிப்பு வழங்கப்படவேண்டும் என தெரிவித்தார். அதனை தொடர்ந்து வழக்குதாரர் அவர்களுக்கு 20.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி திறத்தல் தொடர்பான அறிவிப்பினை 18.02.2019 அன்று மனுதாரருக்கு நேரில் வழங்கியதை மனுதாரர் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

மேலும் 25.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி திறத்தல் அறிவிப்பு கடிதத்தினை 20.02.2019 அன்று ஒப்பந்ததாரர் திருமதி. கல்பனா அவர்களின் முகவரிக்கு விரைவு அஞ்சல் அனுப்பப்பட்டது.

அதனை தொடர்ந்து பலமுறை ஒப்பந்ததாரர் திருமதி எம்.கல்பனா அவர்களை ஒப்பந்தப்புள்ளி திறக்க வருகை தரும்படி கோரியும் அவர் ஒத்துழைப்பு தர மறுத்துவிட்டார். இந்நிலையில் 06.03.2019 ஒப்பந்தப்புள்ளியில் இடம் பெற்ற பிற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் தனியார் லாரிகள் குடிநீர் விநியோக ஒப்பந்தப்புள்ளியை திறந்து மதிப்பீடு செய்ய ஆணையர் அவர்களின் உத்தரவிற்கு அனுப்பப்படுகிறது. மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

பணி எண்.1

வார்டு எண்.1, 2, 3, 4, 5,6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 20, 21, 22, 23, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47 மற்றும் 48 (1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் மூலம் ) விநியோகம் செய்தல் ( 6 எண்ணிக்கை)

ஒப்பந்ததாரர்கள் விவரம்.

1.திரு. எம்.ஏ.மேத்யூ

2.திருமதி. எம்.கல்பனா

3.திரு.பி.மோகன்ராஜ்

பணி எண்.2

வார்டு எண். 16, 17, 18, 19, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36 மற்றும் 37,38 (1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட லாரிகள் மூலம்) விநியோகம் செய்தல் (5 எண்ணிக்கை).

ஒப்பந்ததாரர்கள் விவரம்.

மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்ய உதவி பொறியாளர்களுக்கு உத்தரவிட்டதின் பெயரில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிக்கையில் பணி எண்.1 மற்றும் பணி எண்.2ற்கு கலந்து கொண்ட மூன்று ஒப்பந்ததாரர்களும் கோரப்பட்ட ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கவில்லை எனவும் கூர்ந்தாய்வு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்கள் எனவும் கலந்து கொண்ட மூன்று ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தகுதிப்பெறவில்லை என்பதனை தெரிவித்ததால், ஆணையர் அவர்களால் பணி இரத்து செய்யப்பட்டது.

பணிக்கான மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி

மேற்படி பணிக்கு 27.05.2019 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரி 18.06.2019 அன்று பெறப்பட்டது. திரு எம்.ஏ.மேத்யூ மற்றும் திரு பி.மோகன்ராஜ் ஆகிய இருவர் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி சரியான கோப்புகள் இணைக்கப்படாத காரணத்தினால் 24.06.2019 அன்று இரத்து செய்யப்பட்டது.

பணிக்கான நான்காவது ஒப்பந்தப்புள்ளி.

மேற்படி பணிக்கு லாரிகளின் எண்ணிக்கை 11 இருந்து 6 ஆக குறைத்து வார்டு எண்.1 முதல் 48 வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 09.10.2019 அன்று மன்றத்தின் அனுமதி பெற்று 25.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மேற்படி ஒப்பந்தத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டார்கள்.

1.திருமதி. வளர்மதி
2.M/s.VVA & Co
3.திரு.எம்.ஏ.மேத்யூ
4.திரு.கே.பலராமன்

மேற்கண்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண். 1,2 மற்றும் 4–ல் உள்ள ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெறாததால் மேற்படி மூன்று ஒப்பந்தபுள்ளிகளும் நிராகரிக்கப்பட்டது.

மேலும் வரிசை எண்.3–ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.ஏ.மேத்யூ அவர்கள் ஒப்பந்தப்புள்ளி விதிகளில் கோரியுள்ள தொழில்நுட்ப ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கப்பட்டதால், அன்னாரின் விலைவிகித உரையினை 30.10.2019 அன்று திறக்கப்பட்டது.

மேற்படி பணிக்கு விலை விகித உரையினை திறக்கப்பட்டதில் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர் திரு எம்.மேத்யூ அவர்களின் ஒப்பந்த விலை விகிதத்தில் கோரிய விலையிலேயே பணியை மேற்கொள்ள மாமன்ற அனுமதியுடன் (நகர்மன்ற தீர்மான எண்.231, நாள்.31.10.2019 ) பணி உத்தரவு பணியின் அவசர அவசியம் கருதி 31.10.2019 அன்று திரு எம்.மேத்யூ, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேற்படி பணியானது 01.10.2019 தேதி முதல் 31.10.2020 வரை பணி உத்தரவு படியும், சட்டமன்ற தேர்தல் மற்றும் ஒப்பந்தத்தை இரத்து செய்து நகராட்சி வாகனங்கள் மூலம் இனி வரும் காலங்களில் குடிநீர் விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டு தேவையான வாகனங்கள் கொள்முதல் செய்யவும், தேவையான அளவு ஆழ்துளை கிணறுகள் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டு, மேற்படி பணியினை 01.11.2020 முதல் 30.04.2021 வரை நீட்டிப்பு செய்து மன்றத்தின் அனுமதி பெற்று உத்தரவு வழங்கி பணி நடைபெற்றது.

மேற்படி தனியார் வாகனங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணி 01.05.2021 தேதியில் முழுவதுமாக நிறுத்தப்பட்டு மாநகராட்சி வாகனங்கள் மூலமாக மட்டுமே குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புகார்தாரர் மேற்படி பணிக்கான புகாரினை கீழ்கண்ட தேதிகளில், கீழ்குறிப்பிடப்பட்ட மேல் அலுவலர்களுக்கு புகார் செய்து மனுஅளித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| வ எண். | தொடரப்பட்ட வழக்குகளின் விவரம் | தேதி | வழக்குகளின் இறுதி அறிவிப்பு |
|---|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்வதில் முறைகேடு நடைபெற்றதாக திருமதி.எம்.கல்பனா அவர்களால் தொடரப்பட்ட வழக்கு W.P.No.31350/2019 | 17.09.2020 | மாண்புமிகு நீதி அரசர் அவர்களால் விசாரணை மேற்கொண்ட மேற்படி வழக்கினை மாண்புமிகு நீதி அரசர் அவர்களால் ரத்து செய்யப்பட்டது. |
| 2. | திருமதி.எம்.கல்பான அவர்கள் பணி உத்தரவு முடிவுற்றபின் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகவும் அதற்கான தொகையை வழங்க கோரியும் தொடரப்பட்ட வழக்கு W.P.No/8968/2021 | 14.07.2021 | மாண்புமிகு நீதி அரசர் அவர்களால் விசாரணை மேற்கொண்டு வழக்குதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது. |
| 3. | திருமதி. எம்.கல்பனா அவர்கள் கூடுதல் தலைமை செயலாளருக்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு பணி உத்தரவு முடிவுற்றபின் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதாகவும் அதற்கான தொகையை வழங்க கோரியும் புகார் மனு 23.10.2020 | விசாரணை அதிகாரி மாநகராட்சி ஆணையர் அவர்களால் 24.06.2021 அன்று சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரிடம் விசாரணை மேற்கொள்ளப் பட்டது. | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் உத்தரவின்படி மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் விசாரணை மேற்கொண்டதில் புகார்தாரர் கோரும் காலத்திற்கு பணி உத்தரவு மற்றும் பணி உத்தரவு ஆணை வழங்காத காரணத்தினால் அதற்குண்டான பணம் வழங்க இயலாது எனவும், மனுதாரரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது எனவும் விசாரணையில் முழு அறிக்கையை தயார் செய்து 21.06.2021 அன்று அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. |

8) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரர்கள் வாக்குமூலம் மற்றும் அறிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் 01.06.2018 முதல் 26.10.2010 வரை ஆவடி மாநகராட்சி பகுதிகளில் லாரிகள் மூலம் குடிநீர் சப்ளை செய்ததற்கான நிலுவைத்தொகையான ரூ.3 கோடியை ஆவடி மாநகரரட்சியால் வழங்கிட ஆவண செய்யுமாறு இம்முறைமன்றத்தை கோரியுள்ளார். லாரிகள் மூலம் மேற்கண்ட குடிநீர் விநியோகம் செய்ய மனுதாரர் திருமதி.கல்பனாவுக்கு 26.04.2017 முதல் 31.05.2018 வரையிலான காலத்திற்கு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்றவுடன் ஒப்பந்ததாரரான மனுதாரர் திருமதி. கல்பனா என்பவருக்கு சேர வேண்டிய தொகை (டெபாசிட் தொகை நீங்கலாக) வழங்கப்பட்டு விட்டது. தற்போது மனுதாரருக்கு டெபாசிட் தொகையான ரூ.2.50 லட்சம் மட்டுமே நிலுவையில் உள்ளது என்பதை அறியமுடிகின்றது. மேலும் ஒரு வருடகால ஒப்பந்தம் முடிந்த பின்னர், மாநகராட்சியின் எவ்வித பணி ஆணையுமின்றி 1.6.2018 முதல் 26.10.2019 வரை தன்னிச்சையாகவே ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ததாக மனுதாரர் கூறியுள்ளதை எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர்.

மேலும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட மனுதாரர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையான 3 வருட முன் அனுபவம் மற்றும் Bank statement for turn over, மற்றும் தேவையான வரைவோலை (Demand Draft)போன்றவற்றை இணைக்காதது போன்ற தொழில்நுட்ப காரணங்களால் மனுதாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படவில்லை. இது தொடர்பாக பலராமன் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு (W.P. No.31350 of 2019 and WMP No.31525 of 2019) அவ்வழக்கின் 21.09.2020 நாளிட்ட தீர்ப்பில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதை அறியமுடிகிறது. இந்நிலையில் ஆவடி மாநகராட்சி அலுவலர்களின் அறிக்கை ஏற்கப்பட்டு இம்மனு தள்ளுபடிசெய்து ஆணையிடப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1.திருமதி. M. கல்பனா,
எண்.400, LIG II, TNHB,
ஆவடி,
சென்னை – 600 054.

2.ஆணையாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை – 600 054.

3.மாநகராட்சி பொறியாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை – 600 054.

4.உதவி பொறியாளர்,
ஆவடி மாநகராட்சி,
ஆவடி,
சென்னை – 600 054.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் சென்னை-600 032

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

13.12.21

செயலாளர்